**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண்.126/2023**

**வா.சா.–1 – ,செந்தில்குமார், த/பெ. அண்ணாமலை**

**நாள். 24.02.2026**

**வா.சா.1 இன்று ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

நான் குடியிருக்கும் அம்பாத்துறை கிராமத்திற்கும் பிரதிவாதி குடியிருக்கும் கிழக்கு கோவிந்தாபுரத்திற்கும் இடையே சுமார் 15 கிமீ இருக்கும் என்றால் சரிதான். நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் வியாபாரம் செய்கிறேன். எனக்கும் பிரதிவாதிக்கும் எவ்வாறு பழக்கம் ஏற்பட்டது என்றால் அவர் என் நண்பர், 2014 ம் வருடம் முதல் தெரியும். எவ்வாறு பிரதிவாதியை தெரியும் என்று வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி அரசு ஒப்பந்ததாரராக இருப்பதாக சொன்னார். எத்தனை முறை பிரதிவாதி தனக்கு கடன் கேட்டதாக என்னிடம் கேட்டார் என்றால் 2 முறை கேட்டார். ஒரே தவணையாகத்தான் கடன் கொடுத்தேன். 02.12.2020 அன்று கடன் கொடுத்தேன். பிரதிவாதியின் வீட்டில் வைத்து கடன் கொடுத்தேன் என்றால் அவர்தான் என் வீட்டில் வந்து வாங்கி சென்றார். என்ன காரணத்திற்காக பிரதிவாதி என்னிடம் கடன் கேட்டார் என்றால் அவரது அக்கா மகளின் கல்யாணத்திற்காக கேட்டார். பிரஸ்தபா கடன் தொகையை நான் கொடுத்த சமயத்தில் யார் யார் உடன் இருந்தார்கள் என் வீட்டில் என் அப்பா, என் சித்தப்பா, மனைவி இருந்தார்கள். எனக்கு 2 சகோதரர்கள் அவர்களது பெயர்கள் கோவி, ராஜேஷ் ஆகும்.

**வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.02.24 21:05:17 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.